07.06.2024
RLTOP.No: 11/2022

ம.சா.1 சாட்சி அலமேலு மனுவின் பெயரில் திரும்ப அழைக்கபெற்று இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

என்னிடம் காட்டப்படும் மனு நான் தாக்கல் செய்தது என்றால் சரிதான். மனுவை படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். 2020 ஜனவரி முதல் 2020 ஜூன் வரை மாத வாடகை எவ்வளவு என்றால் ரூ.4,700/- ஆகும். 2022 ஜனவரி முதல் மாத வாடகை எவ்வளவு என்றால் ரூ.5,200/- ஆகும். ரூ.5,200/- வாடகை என்பதற்கு எந்தவித ஒப்பந்தமும் ஏற்படுத்திகொள்ளவில்லை என்றால் சரிதான்.

2020 ஜனவரி முதல் 2020 ஜூன் வரை வாடகை செலுத்தாதற்கு நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் மேற்படி காலத்திற்கான வாடகையை கேட்டபோது எதிர்மனுதாரர் கொராணா காலம் என்பதால் வாடகையை கட்டாயப்படுத்த கூடாது என்று அரசாங்கம் சொல்லி இருப்பதாகவும் வீட்டை காலி செய்வதாகவும் என்னிடம் சொன்னார். அதனால் மேற்படி காலத்திற்கான வாடகை சம்பந்தமாக நான் நடவடிக்கை எடுக்கவில்லை. மேற்படி விபரத்தை எனது மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

பொதுவாக வாடகைக்கு குடிவரும் தேதியில்தான் வாடகை ஒப்பந்தமும் ஏற்படுத்துவார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பொதுவாக வாடகைக்கு குடிவரும் தேதியில்தான் வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்துவார்கள் என்றாலும் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பதிவு செய்யப்படாத வாடகை ஒப்பந்தம் செல்லுமா செல்லாதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பதிவு செய்யப்படாத வாடகை

ஒப்பந்தம் செல்லாது என்று மனுவில் சொல்லிவிட்டு தற்போது அது பற்றி தெரியாது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

பொதுவாக வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தும்போது நிலசுவான்தாரரும் வாடகைதாரரும் இரண்டு அசல் வாடகை ஒப்பந்தங்களை தயார் செய்து ஆளுக்கொன்று வைத்துக்கொள்வார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர்தான் வாடகை ஒப்பந்தத்தை தயார் செய்து கொண்டுவந்தார். நான் அதில் கையொப்பம் செய்தேன். பொதுவாக வாடகை ஒப்பந்தத்தை தயார் செய்யும் போது நிலசுவான்தாரரும், வாடகைதாரரும் சேர்ந்துதான் தயார் செய்வார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அது பற்றி தெரியும் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

நான் தாக்கல் செய்த மனுவில் 06.05.2022ம் தேதியிட்ட பதில் அறிவிப்பு மூலமாகவும் 20.07.2022ம் தேதியிட்ட அறிவிப்பு மூலமாகவும் வாடகை ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டதாக சொல்லியுள்ள நிலையில் இந்த மனுவை தாக்கல் செய்வதற்கு எனக்கு உரிமையில்லை என்றாலும் இந்த வழக்கு ஆரம்ப நிலையிலேயே தள்ளுபடி செய்யப்படவேண்டியஒன்று என்றாலும் சரியல்ல.

நான் சொல்வதுபோல் வா.சா.ஆ. 13 வாடகை ஒப்பந்தமே தயார் செய்யப்படவில்லை என்றாலும் நானாக தயார் செய்துகொண்டேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ. 13 ஆவணத்தில் தயாரித்தவர் என்ற இடத்தில் கையொப்பம் செய்த முத்துராஜ் என்ற நபர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2020 ஜனவரி முதல் 2020 ஜூன் வரையிலான வாடகை பாக்கிக்கு எதிர்மனுதாரருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால்

அனுப்பவில்லை. மேற்கண்டவாறு 2020 ஜனவரி முதல் 2020 ஜூன் வரையிலான காலகட்டத்திற்கு எந்தவொரு வாடகை பாக்கி இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. மாத வாடகை ரூ.3,000/- என்றும் முன்பணம் ரூ.4,00,000/- என்றும் எனக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையில் ஒரு வாடகை ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

முன்பணம் எங்கு வைத்து கொடுத்தார் என்றால் எனது வீட்டில் வைத்து கொடுத்தார். அவருடன் யாரும் வந்தார்களா என்றால் இல்லை. அவர் மட்டும்தான் வந்தார். என்னுடன் யாரும் இருந்தார்களா என்றால் யாரும் இல்லை. நான் மட்டும்தான் இருந்தேன். எனக்கும் வாடகைதாரருக்கும் இடையே சுமூகமான உறவுமுறை இருந்தது என்றாலும் எனது தங்கையின் கணவர் நடராஜன் என்பவருடைய தூண்டுதலின் பெயரில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

எதிர்மனுதாரர் என்மீது தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.112/2022 என்ற வழக்கு சம்பந்தமாக எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கில் எனது தங்கையின் கணவரை 2ம் பிரதிவாதியாக சேர்த்துள்ளார் என்றால் சரிதான். எனக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே நிலசுவான்தாரர், வாடகைதாரர் என்ற உறவு இல்லை என்று நான் சொல்வதால் இந்த வழக்கு நிலைநிற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. விளாச்சேரியில் எனக்கு வீடு உள்ளதா என்றால் உள்ளது. அந்த வீட்டை மராமத்து செய்வதற்காக எதிர்மனுதாரர் மூலமாக வட்டிக்கு பணம் வாங்கி அந்த பணத்திற்கான வட்டியை எதிர்மனுதாரரின் வாடகையில் அட்ஜஸ்ட் செய்துகொள்வதாக சொன்னேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த மனு எதிர்மனுதாரரின்

செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டியஒன்று என்றால் சரியல்ல.